148443

மல்லிகார்ச்சுனயும்

மாணிக்க வள்ளியம்மையும்

இருந்த இடம்

மல்லிகைப் பூவனம்

Y15 (Q2)
N20
148443

உ

கடவுள் துணை.

மல்லிகார்ச்சுனபுரம்

மாணிக்கவல்லியம்மாளியற்றிய

இந்து குடும்ப
பாலிகாபூஷணம்.

இஃது

சென்னைப்புரசை

நாராயணசாமிப்பிள்ளை & பிரதர்

அவர்களது

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1920. [அணா-2.

...ர்முதலிவீதி, புரசை, சென்னை.

கடவுள் துணை.

இந்துக்குடும்ப பாலிகாபூஷணம்.

விநாயகர் துதி.

சன்மம்போம் வல்வினைபோம் காசினியிலே யடுக்கும்
அவலம்போம் போகாத்துயரம்போம் அம்மையுடன்
தில்லைநட னம்புரியும் தேவன் மகிழ்ந்தளித்த
வல்லபை யானைத் தொழுப வர்க்கு.

சரஸ்வதி துதி.

பொன்னேகலையில் பூங்குயிலேபுவிமூன்றிற்கு
மன்னேயெனதுயிர்க்கோர் துணையேயருங்கல்வியுட
னின்னேயமூறற்பொருளுந் தருகுவைவின்மயிலே
வன்னேருயர்வருவெண்டா மரையிற்சரஸ்வதியே.

இப்படி பாலிகைகள் பிள்ளையாரையும் சரஸ்வதி தேவியையும் கும்பிட்டுக்கொண்டு பாடசாலைக்குப் போனால் பாடங்களைச் செவ்வையாய் உபாத்தியாயரிடத்தில் ஒப்புவித்து அடிபடாமல் இருப்பார்கள்.

தொடைதொட்டு விளையாடல்

ஒருபட்டம் திருபட்டம் ஓடிவாமங்களம் பருப்பாஞ்சோறும் பன்னிரண்டு வகையாம் செக்கைத்திருப்பி செவ்வெண்ணெய்வார்த்து மாடுங்கன்று வரும்போதுமஞ்சாத்தண்ணீர் குளிக்கும்போது காலைமடக்கடி காமாட்சி.

மார்பில்தட்டிக்கொண்டு ஓடிவிளையாடல்.

முன்னேபோனமீனாட்சிசின்னவீட்டிற்குவிளக்கேற்றினையா கையில் குழந்தையிருக்கின்றது.

குழந்தையை கீழேவிட்டுவிட்டு ஒருகைகூழைக்குடித்துவிட்டு வாயில பச்சரிசிபோட்டுக்கொண்டு மார்பில் தட்டிக்கொண்டுவா.

என்னகுளத்தில் முழுகினை பீக்குளத்தில் முழுகினேன எங்கள்வீடெல்லாம் பீயாய்விட்டது ஓடிஓடி.

பாலிகைகள உல்லாசவழிநடைவார்த்தைகள்.

நீஎங்கேபோறாய் ஊருக்குப்போனேன், என்னஊர் மைலாப்பூர், என்னமயில் காட்டுமயில், என்னகாடு ஆறுகாடு, என்னஆறு பாலாறு, என்னபால் கள்ளிப்பால், என்னகள்ளி இலைக்கள்ளி, என்னஇலை வாழையிலை, என்னவாழை கற்பூரவாழை, என்னகற்பூரம் ரசகற்பூரம், என்னரசம்மிளகுரசம், என்னமிளகு வால்மிளகு, என்னவால் நாய்வால், என்னநாய்மரநாய், என்னமரம் பலாமரம், என்னபலா, வேர்பலா, என்னவேர் வெட்டுவேர், என்னவெட்டு பனைவெட்டு என்னபனை தாளிபனை, என்னதாளி விருந்தாளி, என்ன விருந்து, மணவிருந்து, என்னமணம் பூமணம், என்னபூ மாம்பூ, என்னமா அம்மா.

கண்களை மூடியாடும் பாடல்

உங்களம்மாள் என்னென்னபோட்டாள் பாலுஞ்சோறுபோட்டாள் ஈ விழுந்ததா எறும்பு விழுந்ததா எறும்புவிழுந்ததை எடுத்துவிட்டுக்குடித்தையா சும்மா குடித்தையா சும்மாகுடித்தேன் உனக்கொருகாயும் எனக்கொருபழமும் தேடிக்கொண்டுவா.

காயேவா பழமேவா காஞ்சிபுரத்து நெல்லேவா.

நான்குமூலைகளிலும் நின்று சுற்றிவிளையாடல்.

காயே கடப்பங்காய் காஞ்சிபுரத்து நெல்லிக்காய் உடப்பே ஊர்காய் ஊரப்போட்ட நெல்லிக்காய்.

கட்டியகையை வாங்கும்பாடல்

இவ்வளவுவேண்டுமா பாவற்காய் அதுவும்வேண்டாம் பீர்க்கங்காய், இவ்வளவுவேண்டுமா பீர்க்கங்காய் அதுவும்வேண்டாம் கத்திரிக்காய், இவ்வளவு

வேண்டுமோ கத்திரிக்காய் அதுவும்வேண்டாம் வாழக்காய், இவ்வளவுவேண்டுமோ வாழக்காய் அதுவும் வேண்டாம் முருங்கக்காய்.

ஏழாங்காயாடும்பாடல்.

1-காய், ஆலைப்பொருக்கி ஆசாரக்கள்ளி தூக்கந் தெளிந்த தாவராடைக்காரி பாக்குமரத்துக்கு பாவாடைக்காரி.

2-காய், வீறியிரண்டெடுக்க விசன் தண்டெடுக்க மாதா மண்ணெடுக்க.

3-காய், முக்கோட்டுராவணன் முத்துச்சரவணன்

4-காய், நான்குநடந்துவர நாகேந்திரன் துடர்ந்துவர.

5-காய், ஐயர்அரைக்கும்மஞ்சள் தேவர்குளிக்குந் தண்ணீர்.

6-காய், ஆக்கோரடிவாழை அண்ணன்தம்பிபெருவாழை.

7-காய், ஏழண்ணன்காட்டிலே எங்களண்ணன்வீட்டிலே மஞ்சள்சாட்டிலே

பொதைபொம்பரம செட்டிசிதம்பரம் கொக்கு கோலாட்டம்.

மழைவரவழைக்கும்பாடல்.

கொட்டைப்பாக்கு நறுக்கித்தாரேன் கோயில்மண்ணைத் தெள்ளித்தாரேன் ஜோர்மழைவா ஜோர்மழைவா ஜோர்மழைவா.

ஆடையுடுத்தல்,

மஜிலின்பாவாடைக் கட்டிக்கொண்டு மத்தாப்பு ரவிக்கை போட்டுக்கொண்டு காடிவண்டியிலேறிக் கொண்டு கன்செட்டுவாத்தியம் வைத்துக்கொண்டு வாங்களம்மாசம்மந்தி போங்களம்மாசம்மந்தி.

சோளமடிக்கும்கொம்மி.

சோளச்சோளாக்காட்டிலே சோளமடிக்கிறவீட்டிலே, பக்தடியேமீனுளே பதக்குச்சோளம் நான்தாரேன், சின்னச்சின்னமூக்குத்தி சின்னப்பனிட்ட மூக்குத்தி, அத்தையிட்டமூக்குத்தி அரப்பனைத்துமூக்குத்தி.

புஷ்பச்செண்டு விளையாடல்.

தங்கசாமாலை சண்பகப்பூமாலை ஆண்டிதோட்டந் தன்னிலே ஆய்ந்தமல்லிமாலை,

தாய்தந்தையர்வளர்த்த அருமைப்பாடல்.

மயிலேகுயிலேஎங்களம்மான மயிலைப்போலே பெணைப்பெற்றாள் சீமைத்துரையெங்களப்பன் சிமிழைப்போலே பெணைவளர்த்தான்.

அம்மானையாடும்கொப்பி.

ஏப்புஇல்லாப்பூ எங்களண்ணிக்குத்தாழம்பூஊரா ரண்ணிக்கு ஊத்தாம்பூ.

நெல்லுக்குத்தும்பாடல்.

நெல்லுகுத்துறபெண்ணே சும்மாபார்க்கிறயென்னை புருஷன்வரான்பின்னே புடைத்துப்போடடி கண்ணே ஆ ஹங் உ ஊங்.

நிலாச்சோறு சமைத்தல்.

அரிசியைக்குத்துமுன்னே யரித்துக்கழுவுபின்னே
உலையிலரிசிபோடு உடனேமேலேமூடு
கொதித்துவெந்தபின்வடித்துகொட்டிஆற்றிஎடுத்து
கத்தரிக்காயையறிந்து காரம்புளிப்புதெரிந்து
உப்புமசாலும்போட்டு ஒத்திருக்கக்கூட்டு
வெந்தபின்னேதாளித்து விரிதயிலையிலமைத்து
யாவருங்கூடிப்புசிப்போம் இன்பமாகவசிப்போம்.

கடவுள் துணை.

இந்துகுடும்ப பாலிகாபூஷணம்.

விநாயகர் துதி.

சன்மம்போம் வல்வினைபோம் காசினியிலே யடுக்கும்
துன்பம்போம் போகாத்துயரம்போம் அம்மையுடன்
தில்லைநட னம்புரியும் தேவன் மகிழ்ந்தளித்த
வல்லபை யானைத் தொழுப வர்க்கு.

சரஸ்வதி துதி.

பொன்னேயலைபயில் பூங்குயிலேபுவிமூன் றிறுக்கு
மன்னேயென துயிர்க்கோர் துணையேயருங்கல்வியுட
னின்னேயமுநற்பொருளுந் தருகுவையின் மயிலே
வன்னேருயர்வருவெண்டா மரையிற்சரஸ்வதியே.

இப்படி பாலிகைகள் பிள்ளையாரையும் சரஸ்வதி தேவியையும் கும்பிட்டுக்கொண்டு பாடசாலைக்குப் போனால் பாடங்களைச் செவ்வையாய் உபாத்தியாயரிடத்தில் ஒப்புவித்து அடிபடாமல் இருப்பார்கள்.

தொடைதொட்டு விளையாடல்.

ஒருபுட்டம் திருபுட்டம் ஓடிவாமங்களம் பருப்பாஞ்சோறும் பன்னிரண்டு வகையாம் செக்கைத்திருப்பி செவ்வெண்ணெய்வார்த்து மாடுங்கன்று வரும்போதுமஞ்சாத்தண்ணீர் குளிக்கும்போது காலைமடக்கடி காமாட்சி.

மார்பில்தட்டிக்கொண்டு ஓடிவிளையாடல்.

முன்னேபோனமீனாட்சிசின்னவீட்டிற்குவிளக்கேற்றினையா கையில் குழந்தையிருக்கின்றது.

குழந்தையை கீழேவிட்டுவிட்டு ஒருகைகூழைக்குடித்துவிட்டு வாயில பச்சரிசிபோட்டுக்கொண்டு மார்பில் தட்டிக்கொண்டுவா.

என்னகுளத்தில் முழுகினை பீக்குளத்தில் முழுகினேன் எங்கள்வீடெல்லாம் பீயாய்விட்டது ஓடிஓடி.

பாலிகைகள உல்லாசவழிநடைவார்த்தைகள்.

நீஎங்கேபோனாய்ஊருக்குப்போனேன், என்னஊர் மைலாப்பூர், என்னமயில் காட்டுமயில், என்னகாடு ஆறுகாடு, என்னஆறு பாலாறு, என்னபால் கள்ளிப்பால், என்னகள்ளி இலைக்கள்ளி, என்னயிலை வாழையிலை, என்னவாழை கற்பூரவாழை, என்னகற்பூரம் ரசகற்பூரம், என்னரசம்மிளகுரசம், என்னமிளகுவால்மிளகு, என்னவால் நாய்வால், என்னநாய்மரநாய், என்னமரம் பலாமரம், என்னபலா, வேர்பலா, என்னவேர் வெட்டுவேர், என்னவெட்டு பனைவெட்டுஎன்னபனை தாளிபனை, என்னதாளி விருந்தாளி, என்ன விருந்து, மணவிருந்து, என்னமணம் பூமணம், என்னபூ மாம்பூ, என்னமா அம்மா.

கண்களை மூடியாடும் பாடல்

உங்களம்மாள் என்னென்னபோட்டாள் பாலுஞ்சோறுபோட்டாள் ஈ விழுந்ததா எறும்பு விழுந்ததா எறும்புவிழுந்ததுஎடுத்துவிட்டுக்குடித்தையாசும்மா குடித்தையா சும்மாகுடித்தேன் உனக்கொருகாயும் எனக்கொருபழமும் தேடிக்கொண்டுவா.

காயேவா பழமேவா காஞ்சிபுரத்து நெல்லேவா.

நான்குமூலைகளிலும் நின்று சுற்றிவிளையாடல்.

காயே கடப்பங்காய் காஞ்சிபுரத்து நெல்லிக்காய் உடப்பே ஊர்காய் ஊரப்போட்ட நெல்லிக்காய்.

கட்டியகையை வாங்கும்பாடல்

இவ்வளவுவேண்டுமோ பாவற்காய் அதுவும்வேண்டாம் பீர்க்கங்காய், இவ்வளவுவேண்டுமோ பீர்க்கங்காய் அதுவும்வேண்டாம் கத்திரிக்காய், இவ்வளவு

வேண்டுமோ கத்திரிக்காய் அதுவும்வேண்டாம் வாழக்காய், இவ்வளவுவேண்டுமோ வாழக்காய் அதுவும் வேண்டாம் முருங்கக்காய்.

ஏழாங்காயாடும்பாடல்.

1-காய், ஆலைப்பொருக்கி ஆசாரக்கள்ளி தூக்கந்தெளிந்த தூவரடைக்காரி பாக்குமரத்துக்கு பாவாடைக்காரி.

2-காய், வீறியிரண்டெடுக்க வீசன் தண்டெடுக்க மாதா மண்ணெடுக்க.

3-காய், முக்கோட்டுராவணன் முத்துச்சராவணன்

4-காய், நான்குநடந்துவர நாகேந்திரன் துடர்ந்துவர.

5-காய், ஐயர்அரைக்கும்மஞ்சள் தேவர்குளிக்குந்தண்ணீர்.

6-காய், ஆக்கோரடிவாழை அண்ணன்தம்பிபெருவாழை.

7-காய், ஏழண்ணன்காட்டிலே எங்களண்ணன்வீட்டிலே மஞ்சள்சாட்டிலே

பொதைபொம்பரம செட்டிசிதம்பரம் கொக்குகோலாட்டம்.

மழைவரவழைக்கும்பாடல்.

கொட்டைப்பாக்கு நறுக்கித்தாரேன் கோயில்மண்ணைத் தெள்ளித்தாரேன் ஜோர்மழைவா ஜோர்மழைவா ஜோர்மழைவா.

ஆடையுடுத்தல்,

மஜ்லின்பாவாடைக் கட்டிக்கொண்டு மத்தாப்புரவிக்கை போட்டுக்கொண்டு காடிவண்டியிலேறிக்கொண்டு கன்செட்டுவாத்தியம் வைத்துக்கொண்டு வாங்களம்மாசம்மந்தி போங்களம்மாசம்மந்தி.

சோளமடிக்கும்கொம்மி.

சோளாச்சோளாக்காட்டிலே சோளமடிக்கிறவீட்டிலே, பந்தடியேமீனாளே பதக்குச்சோளம் நான்தாரேன், சின்னச்சின்னமூக்குத்தி சின்னப்பனிட்ட மூக்குத்தி, அத்தையிட்டமூக்குத்தி அரப்பனாத்துமூக்குத்தி.

புஷ்பச்செண்டு விளையாடல்.

தங்கசாமாலை சண்பகப்பூமாலை ஆண்டிதோட்டந்தன்னிலே ஆய்ந்தமல்லிமாலை,

தாய்தந்தையர்வளர்த்த அருமைப்பாடல்.

மயிலேகுயிலேஎங்களம்மாள் மயிலைப்போலே பெண்ணைப்பெற்றாள் சீமைத்துரையெங்களப்பன் சிமிழைப்போலே பெண்ணைவளர்த்தான்.

அம்மானைபாடும்கொப்பி.

ஏப்புஇல்லாப்பூ எங்களண்ணிக்குத்தாழம்பூ ஊராரண்ணிக்கு ஊத்தாம்பூ.

நெல்லுக்குத்தும்பாடல்.

நெல்லுகுத்துறபெண்ணே சும்மாபார்க்கிறாயென்னை புருஷன்வரான்பின்னே புடைத்துப்போடடி கண்ணே ஆ ஹாங் உ ஊங்.

நிலாச்சோறு சமைத்தல்.

அரிசியைக்குத்துமுன்னே யரித்துக்கழுவுபின்னே
உலையிலரிசிபோடு உடனேமேலேமூடு
கொதித்துவெந்தபின்வடித்துகொட்டிஆற்றிஎடுத்து
கத்தரிக்காயையறிந்து காரம்புளிப்புதெரிந்து
உப்புமசாலும்போட்டு ஒத்திருக்கக்கூட்டு
வெந்தபின்னேதாளித்து விரிதயிலையிலமைத்து
யாவருங்கூடிப்புசிப்போம் இன்பமாகவசிப்போம்.

மாவளிசுற்றல்.

மாவளியோமாவளி மாவளிக்காரன்பெண்டாட்டி
மரக்கால்பிள்ளை பெற்றாளாம்
எடுக்கவந்தசிமாட்டி இடுப்பொடிந்துசெத்தாளாம்
பார்க்கவந்தசிமாட்டி பல்லொடிந்துசெத்தாளாம்
தூக்கவந்தசிமாட்டி தோளொடிந்துசெத்தாளாம்
சும்மாவந்தசிமாட்டி சுருண்டுவிழுந்துசெத்தாளாம்

சிற்றுண்டிவிற்றல்.

காசாலட்டு கைமேலேதுட்டு போனால்வாராதுபொழுதுபோனால் நிற்காது.

சிற்றுண்டியுண்ணல்.

மண்ணடியில்விற்கும்லட்டு வாங்கிமடியில்கட்டு எடுத்துக்கொஞ்சம்பிட்டு எனக்கேமுன்னேயிட்டுஉண்டுவிடுவெப்பம் ஓடிகொஞ்சம் பார்ப்போம்.

தோட்டவிளையாடல்.

புங்கம்இலை புளியம்இலை யெங்கிருக்குது பொன்னப்பன்தோட்டத்தில் மிருக்கிருக்குது அப்பாவாரேன் அவ்விடத்தில் பூச்சியிருக்குது பூச்சிக்கு என்கையில் மருந்திருக்குது கட்டாரி சேலையின்மேல் கண்ணிருக்குது மாமனுக்கெனக்குமொரு வம்பிருக்குது.

மாமனைபேசல்.

மாமாடாமாமா மாமரஞ்சோலை நீவரும்வேளை நிலைக்கண்ணாடி சந்தனப்பொட்டுசரிகைதலைப்பா கைமல் வல்லவாட்டு மகிழ்லாங்குகோட்டு சாயதோவத்தியடா மாமா சரியில்லை புததியடா.

மாமனுக்குப்புத்திகூறல்.

மாமாமாமாபன்னாடே மாமியார்வீட்டுக்குப் பேசிகாதே சுக்கங்காயைத்தின்னாதே குந்தையறுத்தா

னுசாகாதே நாயைமெத்தபேசாதே நாக்கையறுத்துச்சாகாதே.

அத்தானையேசல்

அத்தானே அத்தானே வாருங்கள் அமரிக்கையாயுட்காருங்கள் ஆறுபணந்தாருங்கள் அக்காளழகைபாருங்கள் உங்கள்கண்ணோபூனைக்கண் உசந்த மூக்கோ கிளிமூக்கு பேசம்நாக்கோ பிண்ணாக்கு பெருத்தவாயோ வொருகால்வாய்நல்லவயிறோவண்ணான்சால் நடக்குங்காலோ ஏணிக்கால் அந்தழகுக் கொருவாயேன் இடத்தைவிட்டு எழுந்துபோயேன்.

அத்தானுக்கு அறிவுறுத்தல்.

அத்தான் வத்தானே என்னசொன்னானே-ஆற்றிலிருக்கிறபாவக்காயை அறுக்கச்சொன்னானே-இலையைப்போட்டு சோறுவைத்தால் திப்பியென்றானே-அடையைச்சுட்டு கையில்கொடுத்தால் வரட்டியென்றானே-பிள்ளையைப்பெற்று கையில கொடுத்தால் பொம்மையென்றானே.

அத்தைமகனை ஏசல்.

பூபூபுளியம்பூ பொன்னந்தான் கொண்டைக்குத்தாழம்பூ, அத்தைமகன்வாசலிலே அதோநிற்கிறான் பாருங்கள், மீசையின்முறுக்கைப்பார் மேலேசரிகைக்குட்டையைப்பார், சொக்காயின் சொருசைப்பார் தோவத்தியின் மினுக்கைப்பார், கையில் குடையின் ஒழுங்கைப்பார் கடியாரத்தின் கொணுசைப்பார், இங்கேவந்தகாரியம் என்னவென்றுகேளுங்கள்.

மாமனையும் அத்தானையும் சந்தோஷப்படுத்தல்.

சின்னசின்ன செடிகுலுங்க சித்திரமணிரதங்குலுங்க, வன்னிமரங்குலுங்க வந்திடுங்கள் என்பிறகே,

மங்கையிலேமாடிருக்க மந்திரப்பெண்கள் நாயிருக்க
கொண்டையிலே பூவிருக்க குற்றமென்ன ராஜாவே.

பாலிகைகளுக்கும் அத்தானுக்கும் சம்வாதம்,

அத்தான் சித்திரக்கொள்ளி உனக்கெத்தனைபிள்ளை
பாலிகை சாமிகொடுத்த சப்பாணிப்பிள்ளை.

பச்சைக்கிளியோடிசின்னி பவழக்கொடியோடி சின்னி என்னைத்தொடாதேடிஎன்னி என்பாவங்கொள்ளாதேசின்னி ஆலமரத்தடியேசின்னி ஆறுமாதம் பார்த்தேனடிசின்னி இலவமரத்தடியேசின்னி எட்டுமாதம்பார்த்தேனடிசின்னி என்முகம்பாராயோடிசின்னி என்னைமோசம்செய்யாதடிசின்னி கட்டிக்கரும்போடிசின்னி கண்ணின்மணியோடிசின்னி.

பூமிகள் ஒருபொம்மைக்குச் சின்னியென்று பேரிட்டு அதைக் கையில்வைத்துக்கொண்டு இந்தப்பாட்டைப்பாடி விநோதமாய் ஆட்டுதல்.

கிளிப்பாடல் ஜாவளி.

அரசமரத்துக்கிளி ஆசாரம்பேசுங்கிளி
பாலன்வடிவேலன்கிளி பாடுதுபார்எல்லோரும்
பாருங்களே பாருங்களே. (1)

புன்னைமரத்துக்கிளி புதுமைமெத்தப்பேசுங்கிளி
மாணிக்கம்வளர்த்தகிளி பண்பாகஆடுதுபார்
எல்லோரும் பாருங்களே பாருங்களே. (2)

பாக்குமரத்துக்கிளி பதங்கள்மெத்தப்பாடுங்கிளி
மரகதம்வளர்த்தகிளி மகிழ்வாகஆடுதுபார்
எல்லோரும் பாருங்களே பாருங்களே. (3)

நந்தவனத்துக்கிளி நாகரீகம்பேசுங்கிளி
நடராஜன்வளர்த்தகிளி நலமுடனேபாடுதுபார்
எல்லோரும் பாருங்களே பாருங்களே. (4)

பூங்காவனத்துக்கிளி புலவர்போல்பேசுங்கிளி
பரங்காய்வளர்த்தகிளி பாடுதுபாராடுதுபார்
எல்லோரும் பாருங்களே பாருங்களே. (5)

பெண்கள் 5-வயதுமுதல் 10-வயதுவரையில் இரவில்நிலாச்சோறுசமைத்தல்முதலிய விளையாடல்கள்.

இஷ்டசித்திப்பிள்ளையார்.

உத்தராயண தநுர்மாதத்தில் பாலிகைகள் யாவரும் ஒன்றுகூடி பிள்ளையாரை ஸ்தாபிதஞ்செய்துசூழ்ந்துவந்து கொம்மியடித்தல்.

தநுர்மாதத்துக்கொம்மி.

பிள்ளையார் பிள்ளையார் அவரெங்கெங்கே பிள்ளையார், கத்திரித்தோட்டத்திலே களைகொத்துறார்பிள்ளையார், அங்கேயும் போய்ப்பார்த்தேன் அவரெங்கையோபிள்ளையார், செட்டித்தெருவிலே செண்டாடுகிறார்பிள்ளையார், அங்கேயும்போய்ப்பார்த்தே னவரெங்கையோ பிள்ளையார், கோமுட்டித் தெருவிலே, கொண்டாடுகிறார் பிள்ளையார், அங்கேயும்போய்ப் பார்த்தே னவரெங்கையோபிள்ளையார், வாணியத் தெருவிலே வாதாடுகிறார் பிள்ளையார், அங்கேயும் போய்ப்பார்த்தே னவரெங்கையோபிள்ளையார், பிள்ளையார்கூடம்பிரிந்துகிடக்குதே, எத்தாலேகட்டலாம் இனியேதாலேகட்டலாம்

துட்டாலேகட்டினால் தூசுகள்படருமே
பணத்தாலேகட்டினால் பாசைகள்சேருமே
எத்தாலேகட்டலாம் இனியேதாலேகட்டலாம்.

ஒருகட்டு மூங்கில்பிளந்து மண்டபங்கட்டி, மண்டபத்துக்குமண்ணாரஞ்சி, மாளிக்குப்பொன்னாரஞ்சி, எத்தாலேகட்டலாம் இனியேதாலேகட்டலாம்.

சுத்துகட்டும்பொன்னாலே சூரியவாசலும் பொன்னாலே, அரகட்டும்பொன்னாலே அரண்மனைவாசலும் பொன்னாலே.

குதித்தடிக்கும் கொம்மி.

பல்லவி.

கொம்மியடிப்பெண்கள் கொம்மியடி-உடல்
குலுங்கக்குலுங்கக் கொம்மியடி.

அநுபல்லவி.

செம்மையுறநாளும் நித்யகல்யாணனைச்
சேர்ந்துகும்மி யடியுங்கடி
துயர்தீர்ந்துகும்மி யடியுங்கடி.

சரணங்கள்.

வானவர்போற்றுங்குணாளனடி-மலர்
வள்ளிமகிழுமணாளனடி
தானவர்தமகுலகாலனடி-உயர்,
தங்கமடிதேவசிங்கமடி. (1)

பிறவிப்பிணியைத் தீர்த்திடுவான்-மறை
பேசவுநற்பதஞ்சேர்த்திடுவான்
அறிவழிநிலையாகிடுவான்-பேர்
அன்புக்கிரங்கிக்கண்ணோக்கிடுவான். (2)

விண்ணோர்க்கமுதிந்த தூயனடி-உயிர்
வேதாகமந்துதிநேயனடி
எண்ணுமன்பரநுகூலனடி-கிரி
ஏந்துமாமறைமூலனடி. (2)

பங்கப்பனையின்றநித்தனடி-சிவ
பக்தர்பணிந்திடுங்கர்த்தனடி
மங்களமார்ந்தொளிர்த்தனடி-மூத
மாசனசோதைதனசேயனடி. (4)

விளையாடல்கள்.

பொம்மைக்குக்கலியாணம் செய்யவேவேண்டும்
கம்மல்ஜிமிக்கை கைக்குப்பொன்பாடில்

செம்மைப்பட்டாடைச் சிகப்புச்சிற்றாடை
அம்மணிவாங்கி யருளடியெனக்கே.

பெண்கொள்ளல்.

சின்னசின்னயெந்திரமாம் திருவள்ளூர்கோபுரமாம், எங்களிடஅத்தைமகன் என்னைக்கொள்ளமாட்டேனென்றான், மந்தையில்மாடிருக்க மதுரைபெண்ணாயிருக்க, கொண்டையிலேபூவிருக்க குற்றமென்னராஜாவே, ஏபெண்ணே லவங்கப்பூவே அப்பனெங்கே போனாண்டி, வெள்ளை மலையோரம் வெற்றிலையாங் கொடிபிடிக்க, உன்னைவாமருமகனே பண்ணினது போதுமத்தே, பெண்ணையனுப்பாயோ பெற்றாரே சொல்லுங்கள், எண்ணையில்லை சீப்புமில்லை இளந்தங்காய் மஞ்சளில்லை, வாரிமுடித்துக்கொண்டு வந்திருப்பாள் சந்நினிலே, சந்தைவிலைமதிப்பான் சந்தனத்தைத்தோற்கடிப்பான், பூவைவிலைமதிப்பாள் பூஞ்சரத்தை தோற்கடிப்பார்.

மாமியார் கலியாணப்பெண்ணை அழைத்தல்.

சீப்புவந்துசிக்கிலிருக்குது வாடிமருமகளே
சீப்புவந்தாலெனக்கென்ன அது
சிக்கிலிருந்தா லெனக்கென்ன

கட்டுக்கயிர்வந்து கொடியிலிருக்கு வாடிமருமகளே
கட்டுக்கயிர்வந்தா லெனக்கென்ன அது
கொடியிலிருந்தா லெனக்கென்ன

மாலைவந்து மடியிலிருக்குது வாடிமருமகளே
மாலைவந்தா லெனககென்ன அது
மடியிலிருந்தா லெனக்கென்ன

கூரைவந்து கொடியிலிருக்குது வாடிமருமகளே
கூரைவந்தா லெனக்கென்ன அது
கொடியிலிருந்தா லெனக்கென்ன

தாலிவந்து தரையிலிருக்குது வாடிமருமகளே
தாலிவந்தா லெனக்கென்ன அது
தரையிலிருந்தா லெனக்கென்ன

பார்ப்பான்வந்து பஞ்சாங்கம்சொல்லுகிறான் வாடிம
பார்ப்பான்வந்தா லெனக்கென்ன அவன் [ருமகளே
பஞ்சாங்கம்சொன்னா லெனக்கென்ன
மாப்பிள்ளைவந்து மணைமேலிருக்கிறான் வாடிமருமக
மாப்பிள்ளைவந்தா லெனக்கென்ன அவன் [ளே
மணைமேலிருந்தா லெனக்கென்ன

மாமியார் கலியாணப்பெண்ணை அலங்காரஞ்செய்ய அழைக்கும்போது கலியாணப்பெண் பிணங்கி இன்னுஞ்சிலர் சமாதானப்படுத்தி அழைத்துக்கொண்டுபோய் நலங்கிடல்.

பெண்ணுக்கு நலங்கிடல்

நலங்கிடவாருங்களிப்போ நங்கையரெல்லாம் (நல)

நால்வகைவர்க்கஞ்சேர்ந்த நலமானசந்தனத்தை
நாகபூஷணனுக்கும் இலட்சுமிதேவிக்கும் (நல)

அல்லல்கள்மிகப்புரிந்த அசுரர்கள்சிரமரிந்த
வல்லராமமூர்த்திக்கும் நல்லசீதேவிக்கும் (நல)

பாலுந்தயிரையுமுண்ண பாற்கடல்வெண்ணைநாண
பாலனும்கோபாலனுக்கும் ருக்மணிதேவிக்கும் (நல)

மணமகளை ஏசி நலங்கிடல்

கோவைப்பழம்போல எங்கள்பெண்ணழகு-இந்த
கொடுவாமூஞ்சிமாப்பிள்ளைக்கு நலங்கிடவாரும் (1)

நாகப்பழம்போல எங்கள்பெண்ணழகு-இந்த
நாமூஞ்சிமாப்பிள்ளைக்கு நலங்கிடவாரும் (2)

அன்னாசிபழம்போல எங்கள்பெண்ணழகு-இந்த
அழுகுகெட்டமாப்பிள்ளைக்கு நலங்கிடவாரும் (3)

எலுமிச்சம்பழம்போல எங்கள்பெண்ணழகு-இந்த
எரிமூஞ்சிமாப்பிள்ளைக்கு நலங்கிடவாரும் (4)

தம்பதிகளுக்கு நலங்கிட்டு மணமாலையிட்டமறுநாள் ஊஞ்சலிடுதல்.

சீரானபொற்பலகை திகழச்சேர்த்து
செம்பவளக்கால்நான்கு சேரவேநாட்டி
ஏரானவயிரச் சங்கிலியுந்தூக்கி
ஏற்றமரகதக் கொடுங்கையும்பூட்டி
கோரானநவரத்ன பீடமமைத்து
நிகரிலாமுத்துத் தொங்கல்நிறைந்தவூசல்
பேரானஜானகியாள் பிணையாய்க்கூட
பெறுமையுறு ஸ்ரீராமராடி (ஊசல்)

தேவர்முதல்கிஞ்சையர்கள் தெளியாழ்வல்லோ
திரளாகவந்துஜய விஜயமென்ன [ர
பாவில்திருவாய்மொழியைப் பலருங்கூடி
பாவையர்கள்குழுவிமனங் களிக்கப்பன்ன
சாலிகலைதுறவாடினங் கனிந்துபோற்றக்
களங்கமிலா வடியர்குழாங்கந்து
தேவிஜானகியணங்கை சிறப்பாய்க்கூடி
திகழுதசரதராமராடி (ஊசல்)

சங்கீதவாத்தியங்கள் தழங்கவேத
சாமகானமுமெய்யர் தழைக்கவோத
இங்கிதமாய்க்கனிகையரும ஏற்பாய்பாவ
இராகதாளங்களுமே யிசையநாத
மெளகினும்பேரொலிகேட்க இனிதாயாடி
இன்பமாய்லாலி யெச்சரிக்கைபேச
மங்களமாய்ஜானகியை மணமாய்கூடி
மனமகிழும் ஸ்ரீராமராடி (ஊசல்)

திருமணமும் மங்களவாழ்த்தும்.

அத்தைமகள் உத்தமியை கொள்ளவே வேண்டும்
அழகான சிறுதாலி கட்டவே வேண்டும்

கடவுளைப் பழகாளுந் தொழவே வேண்டும்
கவிதீரப் பிள்ளையைப் பெறவே வேண்டும்
குலம்விளங்கக் கிருஷ்ணுவென் றழைக்கவே வேண்டு
குதலைச்சொல் கேட்டுமிக மகிழவே வேண்டும் [ம்
வருத்தநோ யில்லாமல் வளரவே வேண்டும்
வாழையடி வாழையாய் வாழவே வேண்டும்

என்று பெரியோர்கள் ஆசிர்வதித்தபின் சிறிதுநா ள் மதனும்ரதியும்போல் வாழ்ந்திருந்து ஒருநாள் இருவரும் சந்நிதிக்குச்சென்று கடவுளை வழிபடல்.

ராஜராஜேஸ்வரிதுதி.

அகிலபுவ னஞ்சரா சரமீன் றளித்தாளு
மாதியே பவிற்சோதியே
அமலகலி யாணகுண மங்கள சொரூபியே
அன்னமேயொளிர் சொர்னமே
புகலரிய தன்கருணை வாரியே சிரியர்கள்
புந்தியுறை சுகுமாரியே
பொருவினற் றுயினுஞ் சாலவன் புடனெனைப்
புவிமிசைக் காத்தருளுவாய்
ககனநீண் டோங்குபல மாடமலி யெழின்மிக்க
கச்சியிற் காமாக்ஷியாய்
கனமதுரை தன்னின்மீ னாக்ஷியாய்க் காசியிற்
காமரு விசாலாக்ஷியாய்
மகிதலம் போற்றுதிரு வொற்றியூர் தியாகர்தம்
வாமபா கத்தமர்ந்து
வருசக்ர வாரத்தி லடியவர்க் கருள்செய்யும்
வடிவாம்பிகைச் செல்வியே.

பரமேஸ்வரர் துதி.

அரும்பொனே மணியே யென்னன்பே யென்னான
வறிவே யெனறிவினுரு

மானந்த வெள்ளமே யென்றென்று பாடினே
னாடினே னாடிநாடி
விரும்பியே கூவினே னுலறினே னலறினேன்
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி யெனவெனிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தேனியா
னிரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னாலுமெனை
யிடைவிட்டு நின்றதுண்டோ
வென்றுநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ
யாதேனு மறியாவெறுந்
துரும்பனே னென்னினுங் கைவிடுதல் நீதியோ
கொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வமேபரஞ்
சோதியே சுகவாரியே.

இருவரும் சந்நிதிக்குச்சென்று கடவுளைவழிபட்டு அவரருளைப்பெற்று சுகமாய் இருவரும் வாழ்ந்து மக்களைப்பெற்று மகிழ்ந்திருந்தல்.

இதுபோலவே பெண்கள் தங்கள் குடும்பத்தில் நடக்கவேண்டிய முறைமைகள்.

பாலிகைகள் பணஞ்சேர்க்கும் பாடல்.

ஏலேலோ ஏலேலோ பெண்மயிலே ஏலேலோ ஏலேலோ, குணமிருந்தா லொன்றுமில்லை நல்ல குலமிருந்தா லொன்றுமில்லை, பணமிருந்தா லவர்காலிற் பணிவார்கள் ஜகத்திலுள்ளோர், ஏலேலோ ஏலேலோ பெண்மயிலே ஏலேலோ ஏலேலோ.

ஐரூர்.

பணமிருந்தாலது பத்துவகைசெய்யும்-பணமிலா தவருலகிற் பிணமாகையாலே-பாடுபட்டுப்பணந்தேடவேவேண்டும்-பாங்காய்மதிக்கவுட லெடுக்கவேவே

ண்டும்-ஒருகாசுடன்வேறு ஒருகாசிதேடும்-உபாயத்
திலேயென்றும் ஊக்கம்வரவேண்டும்-காசுகளைக்கால
ணா வாங்கவேவேண்டும்-கருத்தாகவதனைமுடி போ
டவேவேண்டும்-வீணாகச்செம்பொன்று செலவுசெய்
யாமல-வெள்ளிரூபாயாக்க விருப்பமுறவேண்டும்-த
குவெள்ளிரூபாயைச் சவரன்களாக்கும்-தந்திரமுய
ன்றுபொருள் சேர்க்கவேவேண்டும்-எவ்வாறு பணந்
தேடும் வகையென்றுகேட்கில்-எளிதான மார்க்கங்க
ளொத்தனையோவுண்டு-பாவாடை ரவிக்கைகள் தைக்
கத்தெரிந்தால்-பலபேர்களுந்தேடி வந்துபொருள்த
ருவார்-கம்பளிநூல்வேலை கற்றுத்தெளிந்தால்-கழுத்
துக்குப்பட்டைகள் ஜோடுபின்னிடலாம்-சித்திரவிசி
த்திர புஷ்பங்கள்செய்தே-சீரானகொண்டைக்கு அ
ணியாகத்தரலாம்-சொகுசாய்த்தலைக்கணிய தொப்
பிகள்செய்யலாம் சுந்தரமுடன்வேறு பலவேலைசெய்
யலாம் - அங்காரமொக்குகள் அவைபோடத்தெரிந்
தால்-அனைவர்க்குங்கற்பித்து அதிலும் பணம்பெற
லாம் - சொன்னவகையாற்பணஞ் சுளுவாகததேடி-
சுறுக்குப்பையிற்போட்டுச் சும்மாவிராமல் - வளர்பி
றைதனைப்போல வளரவேகாணும் - வட்டிக்குமாறிய
தை வளர்க்கவேவேண்டும்-ஒன்றுபத்தாய்ப்பத்துநூ
றாகும்வழியே-உள்ளதில் நாடியதை கொள்ளவே
வேண்டும்-கைப்பொருளிருந்தால் கனகமிக்கவுண்டு-
கம்மல்புலாக்குடன் கத்தரிப்பாவல்-ஜிமிக்கிகொப்
புடன் சீரானமுருகு-சிங்காரஜடைபில்லை திகழ்மயிர்
மாட்டி-காப்புகொலுசுகள் கலலட்டிகையும்-தரிர்வி
சுவங்கியும் கைவின்மோதிரமும் - ஒடிடியாணத்துட
ன் ஒளிர்கால்கொலுசும்-உற்றவிரலிற்பீலி காலாழி
சுற்றும்-மஸ்லின்பாவாடை மத்தாப்புரவிக்கைகளும்

மதிப்பிலாப்பவளமுள்ள பட்டுப்புடவைகளும்-இன்ன
மும்பலநகைகள்,ஏற்றவாடைகளும்-இனிதாகக்கொ
ண்டணிந்தெழிலாயிருந்தால்-பொருளுள்ள பெண்
ணையேபுருஷர்நாடுவதால்-புகழான-பீ-ஏ-எம்-எபட்
டம்பொருந்தும் - நல்லமணவாளனை நலமாகவடைந்
து-நகமுஞ்சதையும்போல நட்பாகவாழ்ந்து - நாடு
பொருள்கூடு உனக்கிடுவோர்தேடு (ஏலேலோ)

குடும்ப ஒழுக்கம்.

ஏலேலோ ஏலேலோ உத்தமியே ஏலேலோ ஏலே
லோ, சீரான பெண்ணரசே சிறந்த ஒரு புருஷனைக்
கே, ஆராய்ந்து உன்னைப்பெற்றோர் அழகாக மணம்
பேசி, ஏலேலோ ஏலேலோ உத்தமியே ஏலேலோ
ஏலேலோ.

ஐரூர்.

பந்துஜனங்களுக்கெல்லாம் பரிவாகச்சொல்லி-பா
ங்காகக்கலியாணப்பந்தலலங்கரித்து-வாழைக்கமு
குகள் வரிசையாய்நாட்டி-வாத்தியங்கலென்று மா
ண்பாயொலிக்க-நலமுற்றவேளையிலும் புறஞ்சூழ்ந்து
பொலிவுள்ளமாதர்கள நலங்கிட்டுமுடிக்க-தக்கவுத
கத்தாலே ஸ்நானஞ்செய்வித்து - சார்ந்த பரிமளப்
பொடிகள் தயங்கமெய்ப்பூசி-சரிமலாக்குழலுக்குத்
தூபங்கள்காட்டி-சொர்ணபூஷணங்கள்பல அலங்க
வலங்கரித்து-மாதர்கள்பலர்சூழ்ந்து மங்களம்பாட-
வேதியர்கள்பல்லாண்டு வினயமிமகிழ்கூற-அக்கினிய
ருந்தி யிவர்சாக்ஷியாக-அருகாகநின்று தத்தஞ்செ
தனிக்க-தாலிகட்டியகணவ னேதெய்வமாக-தவறும
லவனசொல்லும் வழிநிற்கவேண்டும் - மாமியார்நாத்
திகளை மகிழ்விக்கவேண்டும் - மாறுசொல்லாமலவர்

சொற்கேட்கவேண்டும்-கணவனுர்கோபிக்க வொன்றுஞ்சொல்லாதே-காட்டேறிபோலவன் முன்னேநில்லாதே-ஒன்றுக்குபலசொற்கள் பேசியெதிர்க்காதே-ஒட்டாரம்செய்துபாய் போட்டுப்படுக்காதே-ஆத்திரங்கொண்டொரு அடியுன்னையடித்தால்-அடியென்றுமடியிற்கை பிடித்திழுக்காதே - இல்லாதபொருள்களுக் கிச்சைவையாதே-எந்நேரமுஞ்செல்லைப் போலரிக்காதே-வீட்டுச்சங்கதிகளை வெளியிற்சொல்லாதே வெட்கங்கெடப்பிறர் நகைக்கவையாதே - பாழான கோபத்துக் கிடங்கொடாதே-பத்திரகாளியைப்போலத் தலைவிரிக்காதே-வரவுக்குமேலிட்ட செலவுசெய்யாதே-வாழ்நாளெல்லாந்துக்கப் படவைத்திடாதே-இதமானவார்த்தையே பேசிவரவேண்டும் - இஷ்டப்பதார்த்தங்கள் சமைத்துவைக்கவேண்டும்-கூன்குருடானாலுங் குறைபேசிடாதே-குலங்கெட்டபோதிலும் குற்றம்வையாதே-அன்னியபுருஷர்மேலாசைவையாதே-அதனாலவமான மடக்கமுடியாதே-காசுக்கருந்திட்ட கற்புபெண்கோடி - கணக்காகக்கொடுத்தாலும் மீளவாராதே-அயல்வீட்டுக்கடிக்கடி போகநினையாதே-அலக்ஷியமாய்பேச வுடலெடுக்காதே-மேனிமினுக்கி ஒலிவாய்நடவாதே-வேறுபுருஷரிச்சை கொள்ளததிரியாதே-இவ்வாறு நடத்திடிற் குடும்பவிஷயங்கள்-எந்நாளுங்குறையாமலிட்டேறிநல்ல - புத்திரப்பேறுடன்போகபாக்கியங்கள்-பொற்பூஷணங்களும் புகழுடன்பெறுவாய்-தேர்ந்துதுயர்தீர்ந்து அருள்கூர்ந்துமிகயோர்ந்து (ஏலேலோ)

மாதர்கற்புப்பாடல் ஆனந்தக்களிப்பு.

கர்த்தாவேமுதல்தெய்வம்மானே-பின்பு
பத்தாவல்லாலுண்டோ பாக்கியந்தானே

புருஷன்வார்த்தைதட்டாதே-முட்டும்
எருதுபோல்நீசண்டைக் கிடுப்புக்கட்டாதே
தேகமுஞ்சீவனும்போலே-கொண்ட
மாகணவனுடன் வாழ்வதுமேலே
கணவனுன்மேற்பகைமூர்க்கம்-செய்யில்
குணமாகப்பேசிக் குலாவுதல்மார்க்கம்
கற்புநிலையேசிங்காரம்அது-
தப்பினோரழகு சவவலங்காரம்
அரைக்காசுக்கழிந்திட்டகற்பு-நூறு [பு
மாக்காற்பொன்கொடுத்தாலும் வருமோநீசெப்
அந்நியனழகனானாலும்-கற்பின்
அரசனைநம்பிப் புருஷனைக்கைவிடாதே
சிற்றின்பந்தானொருகொடியே-வரும்
குற்றமுப்பழிகளுங் கொடிபோற்கொடியே

என்றவிவேகிகளின் உபதேசங்களை ஒவ்வொருஸ்திரீயும் கவனித்து நடந்து புருஷருடன் ஒருமைப்பட்டு சுகமாய்வாழ்ந்து குழந்தைகளைப்பெற்று ஈமொய்க்காமலும் எறும்புகடியாமலும் காற்றுவீசாமலும் பனிபெய்யாமலும் மார்பிலும் தோளிலும் வயிற்றிலுமணைத்து முலையூட்டி மூக்குச்சிந்தி நாசிபூதி செவியுருவி நீராட்டி விழிகளுக்கு அஞ்சனந்தீட்டி பலமணிகளும்பூட்டி கன்னங்கிள்ளி உச்சிமோந்து கண்ணோடு கண்ணும் வாயோடு வாயும் முகத்தோடு முகமும் வைத்துக் கொஞ்சி முத்தாடி அருந்தனம்போற் பாவித்துப் பொற்றொட்டிலிட்டுத் தாலாட்டல்.

ஆராரோ ஆரிரோ ஆராரோ ஆரிரே.

சீரார்பசுங்கிளியே தெவிட்டாதசெந்தேனே
பேரார்குலக்கொழுந்தேபெருமானே கண்வளராய்( )

மாணிக்கக்கால்காட்டி வஜ்ரவடம்பூட்டு
ஆணிப்பொன்தொட்டிலிட்டேன் அருமருந்தேகண்
மானேமரகதமே மல்லிகையேசண்பகமே [வளராய்
தேனேபசுங்கிளியே செல்வமேகண்வளராய் (ஆ)

பெருஞானவாரிதியாம் பேருலகிலேயுதித்த
திருஞானசம்பந்தச் சீமானே கண்வளராய் (ஆ)

தப்பானபுன்சமணச் சார்பைக்கழித்துயர்ந்த
அப்பாதிருநாவுக் கரசேநீகண்வளராய் (ஆ)

வேதாவுங்காணா விமலனைப்பேதையிடத்
தூதாவனுப்புஞ் சுந்தரனேகண்வளராய் (ஆ)

வேணிப்பாள்கமல மெல்லடிவேபோற்றிசெயும்
மாணிக்கவாசகப்பேர் மாதவனேகண்வளராய் (ஆ)

ஆதிமறைப்பொருளை யகிலமிசைவள்ளுவராய்
நீதிமுறையருளும் நின்மலனேகண்வளராய் (ஆ)

வெம்மாயைநீக்கி வெளியாகவந்துதித்த
நம்மாழ்வாரேயெங்கள் நற்றவமேகண்வளராய் (ஆ)

கருமமெல்லாம்போக்குங் கதியைத்தரவந்த
திருமழிசைவாழ்வாரே செம்மாலேகண்வளராய்(ஆ)
காமாளச்செய்த கஜமளித்தோன்சீர்பாடும்
இராமாநுஜனே இலஞ்சியமேகண்வளராய் (ஆ)

அன்னநடைமெல்லியர்க ளாசையுடன்முத்தமிடும்
கன்னுகன்ன தல்லியெனும் நாயகியேகண்வளராய் ()

பொன்தொட்டிலில் நித்திரைசெய்து விழித்துக்கொண்ட குழந்தையைத் தாயாரெடுத்து பால்கொடுத்தல்.

ராகசபங்கா சீக்ரமேசனுவென்னும் வர்னமெட்டு.

பல்லவி

வாராயென்கண்ணே வந்தென்பாலையுண்ண
சீரகத்தின்ன சீக்கிரம்மன்ன (வா)

சரணங்கள்.

நித்திரைவிட்டெழுந்து நேரமாச்சுதின்று
தத்தித்தவழ்ந்து தனயனேநீநன்று (வா)
நெஞ்சவுலருமடா கெஞ்சியழைத்தேனடா
வஞ்சமேனடாநிற்கு வலுவிலழைத்தேனடா (வா)
குஞ்சமணிச்சிலங்கு கொண்டுவந்தேனடா
பஞ்சணையுஞ்சல்விட் டிங்கணம்நீவாடா (வா)
தேவானுகூலா தேவகிதேவிபாலா
வேணுகோபாலா வேண்டினேன்தயாளா (வா)

தாய்மார்கள் குழந்தைகளை நறபழக்கத்தில்
கொண்டுவரும் முறைமைகள்.

சாய்ந்தாடல்.

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு தாமரைப்பூவே சாய்ந்தாடு, குத்துவிளக்கே சாய்ந்தாடு கோயிற்புறாவே சாய்ந்தாடு, பச்சைக்கிளியே சாய்ந்தாடு பவளக்கொடியே சாய்ந்தாடு, சோலைக்கிளியே சாய்ந்தாடு சுந்தரமயிலே சாய்ந்தாடு, கண்ணேமணியே சாய்ந்தாடு கற்பக்கொடியே சாய்ந்தாடு, கட்டிக்கரும்பே சாய்ந்தாடு கனியேபாலே சாய்ந்தாடு.

கைவீசுதல்.

கைவீசம்மா கைவீசு கடைக்குப்போகலாம் கைவீசு, மிட்டாய்வாங்கலாம் கைவீசு மெதுவாய்த்தின்னலாம் கைவீசு, அப்பம்வாங்கலாம் கைவீசு அமர்ந்து தின்னலாம் கைவீசு, பூந்திவாங்கலாம் கைவீசு பொருந்தியுண்ணலாம் கைவீசு, பழங்கள்வாங்கலாம்கைவீசு பரிந்துபுசிக்கலாம் கைவீசு, சொக்காய் வாங்கலாம் கைவீசு சொகுசாய்போடலாம் கைவீசு கோயிலுக்குப் போகலாம் கைவீசு கும்பிட்டுவரலாம்கைவீசு, சும்மாய்ப்பார்க்கலாம் கைவீசு திரும்பிவா

லாம் கைவீசு, கம்மல்வாங்கலாம் கைவீசு காதில் போடலாம் கைவீசு.

தலைப்பிடித்தாட்டல்.

சின்னி தலைநொந்ததே சின்னக்கா தலைநொந்ததேபாபா தலைநொந்ததே பாபக்கா தலைநொந்ததே.

குழந்தைக்குப் பாற்சாதம் ஊட்டல்.

அம்மா அம்மா பூச்சி சின்னி சின்னி தேச்சி [சி
இன்னங்கொஞ்சம் சோச்சி பின்னுங்கொஞ்சம்பாச்
எல்லாஞ் செரித்துப் போச்சா இன்னும் பெரு மூச்
சில்லுண்ட தாச்சா நீயேபெரும் பாச்சா. [சா

இவ்வாறு விளையாடச்சென்ற குழந்தையைக் காணோமென்று தாயார் வருத்தமுற்றுத் தேடுதல்.

குழந்தையைத்தேடும்பாட்டல்.

என்குழந்தைபோனவிட மெனக்குதெரியாதே
எந்தன் துரைமிக்ககோபி என்னசொல்லுவாரோ ()

நல்லதொருதொட்டில்கட்டி நான்வளர்த்தகுழந்தை
நான்வளர்த்தகுழந்தைதனை நஷ்டமிட்டவளாரோ()

தங்கச்சிலங்கைகட்டி தரையில்விட்டமகவு
தரையில்விட்டமகவதனை சாத்திகொண்டவளாரோ

வெள்ளியினால்சலங்கைகட்டி வெளியில்விட்டமகவு
வெளியில்விட்டமகவதனை மடக்கிவைத்தவளாரோ

கூவுங்குயில்தொனியுடனே கொஞ்சிவரும்பாலன்
கொஞ்சிவரும்பாலன்தனை கூவியழைத்தவளாரோ()

தங்கதுரையெந்தன்சாமி தானென்சொல்லுவாரோ
மாயமலைபழனிவடி வேலாகிருபைசெய்வாய் ()

சொல்பழக்கங்கற்பிக்கும்பாடல்.

கும்பகோணமேகோணம் குறவன்நட்டதேசோளம்
ஸ்ரீராமர்விட்டதேபாணம் அதுவெங்கேபோனதோ
[காணம்

உள்ளங்கையில் நெல்லுகுத்திக்காட்டும்பாடல்.

அகத்திக்கீரைபிண்ணாக்கு அதிலேகொஞ்சம்நெய்வாறு, பிஞ்சிக்கத்திரிக்காய்பொரியல் பின்னுங்கொஞ்சம் நெய்வாறு.

கைபோடுகைதட்டி.

கும்மியடிக்கச்சொல்லும்பாடல்.

தந்தானகும்மி தானானகும்மி
அன்னதானத்துக்கு சின்னகும்மி

பாராக்குக்காட்டல்

காக்கா-கண்ணுக்குமைகொண்டுவா
குருவி-கொண்டைக்குப்பூக்கொண்டுவா
கொக்கு-குழந்தைக்குத்தேன்கொண்டுவா
கிளியே-கிண்ணத்தில்பால்கொண்டுவா.

அப்பாமுன்னேவாருங்கள் அழாதேயென்றுசொல்லுங்கள்.

நிலாவை அழைத்துக்காட்டல்.

நிலாநிலா வாவா-நில்லாமலோடிவா, மலைமேலே ஏறிவா - மல்லிகைப்பூக் கொண்டுவா, நடுவீட்டில் வையே - நல்லதுதிசெய்யே, வெள்ளிக்கிண்ணத்தில் பால்சோறு- அள்ளியெடுத்து அப்பன்வாயில், கொஞ்சிக்கொஞ்சியூட்டு-குழந்தைக்குச்சிரிப்புகாட்டு.

நிலாவோடு வார்த்தையாடிக்காண்பித்தல்

நிலாநிலா எங்கெங்கேபோறாய், மலையாங்குளத்துக்கு மண்ணெடுக்கப்போறேன், மண்ணென்னத்துக்கு சொப்புபண்ண, சொப்பென்னத்துக்கு மாடுவாழக, மாடென்னத்துக்கு சாணம்போட, சாணமென்னத்துக்கு வீடுமொழுக, வீடென்னத்துக்கு பிள்ளைபெற, பிள்ளையென்னத்துக்கு-ஓலைப்பாயிலே ஓடிவிளையாட, ஈச்சம்பாயிலே யிருந்துவிளையாட, பிரப்ப

ம்பாயிலே புரண்டுவிளையாட, கோரைப்பாயிலேகுதி
த்துவிளையாட, தாழம்பாயிலே தவழ்ந்துவிளையாட.

வெண்ணிலாவை வினவல்.

வித்திலாமலேவிளைந்த வெண்ணிலாவே-நீதான்
விளைந்தவண்ணமேதுசொல்வாய் வெண்ணிலாவே
அந்தரத்திலாடுகின்றார் வெண்ணிலாவே-அவர்
ஆடும்வகையெப்படியோ வெண்ணிலாவே
ஞானமாய்விளங்கும் வெண்ணிலாவே-அன்னை
நானறியச்சொல்லுகண்டாய் வெண்ணிலாவே
அந்தரங்கசேவைசெய்ய வெண்ணிலாவே-எங்கள்
ஐயர்வருவாரோசொல்வாய் வெண்ணிலாவே
ஆருமறியாமலிங்கே வெண்ணிலாவே-அரு
ளாளர்வருவாரோசொல்வாய் வெண்ணிலாவே

அணைபாடையிலிட்டுத் தாலாட்டுதல்.

ஆராரோ ஆரிரோ ஆராரோ ஆரிரோ

முத்தே பவளமே முக்கனியே சர்க்கரையே
கொத்து மருக்கொழுந்தே கோமளமேகண்வளராய்
ஆயர் குலத்தில் அவதரித்த மாமணியே
மாயனே கண்ணா மகிபனே கண்வளராய் (ஆ)

தாயார் பால்கொடுத்தபின் குழந்தை தவழ்ந்துவி
ளையாடிக்கொண்டிருக்கையில் வேறுசிலமாதர்கள் அ
க்குழந்தையை யெடுத்து அதுசெய்யும் சேஷ்டைக
ளைத் தாயிடங்கூறல்.

கீர்த்தனை.

கிருஷ்ணன்செய்திகேளும்-மாய
கிருஷ்ணன்செய்திகேளும்

அரிதுதவழ்ந்துவந்து-எங்களை
அணைத்துக்கொள்கிறானே (கிருஷ்ணன்)

உரலுக்கிலேறி-தயிர்பால்
உரியைபுரட்டுகிறானே (கிருஷ்ணன்)

பின்னேவந்து மெதுவாய்-பெண்கள்
பின்னல்பற்றி யிழுப்பான் கிருஷ்ணன் 3

திரும்பிப்பார்த்துக்கேட்டாள்-யாரோ
தெரியாதென்று சொல்லுவான் கிருஷ்ணன் 3

முகத்துக்கெதிரேவந்து-விரைவில்
முத்தமிட்டு மறைவான் கிருஷ்ணன் 5

தேடிபார்க்கும்போது எங்கும்
தெரிந்திடாமலொளிப்பான் கிருஷ்ணன் 6

எங்கள்புருஷர் கண்டால்-நாங்கள்
என்னசெய்வமம்மா கிருஷ்ணன் 7

குழந்தையென்றுபார்த்தோம்-அவன்செய்
கொடுமைமெத்தசகியோம் கிருஷ்ணன் 3

பொறுத்தவரைக்கும்போதும்-உன்மகனுக்குப்
புத்திசொல்லுமம்மா கிருஷ்ணன் 9

சகானாராகம்-ரூபகதாளம்.

குழந்தைக்குத் தாயைக்கொண்டு புத்திசொல்லச் சொல்லுதல்.

பல். புத்திசொல்லடியசோதே-உன்மகனுக்கு
புத்திசொல்லடி யசோதே.

புத்திசொல்லடி யசோதே நித்தமுங்கள் கிருஷ்ணனு
க்கு, அத்தைமாமி நாத்தியென்றும் சற்றுமரியாதை
யில்லை.

கட்டிவெண்ணெ யணைந்தானு-அணைந்ததற்கு
தொட்டுதாலி கட்டினானு
கட்டவும் மதித்தானு-இப்படிப்பட்ட
துஷ்டபிள்ளை பெற்றதேனோ
துஷ்டதன்மை பிறந்தாலும்
மட்டுமரி யாதையில்லை
கட்டிலின்மேல் உறியில்-வெண்ணெய்
சட்டிவைக்க ஆசையில்லை

148463

சித்திரமெத்தை மீதிலிருந்து-அசைந்தசைந்து
நித்திரைசெய்வது தான்கண்டான்
மெத்தெனவே வோடிவந்தான்-கையினால்வாயை
பொத்தியா யமைத்துக்கொண்டான்

மட்டுமீறியென்ன செய்வோம்
வெட்கத்தையாரோடே சொல்வோம்
இத்தனைபேர் பெண்களிலே
பத்தினி யொருத்தியில்லை பு

பண்டுபழி யெங்கள்மீதில்-இராமகிருஷ்ணனை
தண்டனைசெய்ய வொண்ணுதா
கண்டுங்காணுதே யிருந்தால்-அவன்மனம்
சண்டையேனென் றெண்ணுதா

வண்டுபோல் இருந்தசகம்
கண்டவ ளிவனல்லவோ
பெண்டென்று சொல்லுவதைக்
கொண்டவ னறிந்ததில்லை-புத்தி

தாயார் குழந்தைக்குப் புத்திகூறல்.

சமாராகம்-ஆதிதாளம்.

பல். என்டாவுனக்கிந்த துஷ்டத்தனங்கிருஷ்ணு
வேண்டாமிக்காரியம் என்வார்த்தையைக்கேளடா

சரணங்கள்.

உரியில்தயிர்பாலை உருட்டிவிட்டோடுறயா
பிரியமுடனிருந்தேன் வார்த்தைக்கேளடா எ

சட்டிவெண்ணையெல்லாம் சலிப்பிட்டுதின்றுயா
பட்டிகாரிகள்கண்டால் பதைத்தடியாரோடா எ

வீடுவீடாய்நுழைந்து விட்டுக்கதவடைத்து
தாடிமுத்தந்தாவென்று தாவிக்கையைபிடித்தாயா

இக்குவலயந்தன்னில் என்பேரையழிக்கவந்தாய்
முகுந்தாமாதுரு தாசன்கையாரோடா எ

குழந்தைஸ்திரீகளின்மீதுதாயாரிடம்குறைகூறல்.

பூரிகல்யாணி-ராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பொல்லாத கோபிகளம்மா அவர்கள்
இல்லாதவார்த்தைகளைச்சொல்லுராம்மா (பொ)

சரணங்கள்.

இருட்டிலே வெண்ணெயெட்டுமோ அங்கே
இருக்குமுரியில்வெண்ணெய் எனக்கெட்டுமோ
திருட்டுப்பே யென்னைத்திட்டுமோ இந்த
பிரட்டகர்சொல்லுகிறது சரிகட்டுமோ (பொ)

வெண்ணெயிங்கே கிடையாதோ தங்கக்
கிண்ணியிலேநீந்த வெண்ணெய்போதாதோ
அண்ணனுக்குத் தெரியாதோ இந்த
விண்ணாணக்காரர்கள் என்னாலாகாதோ (பொ)

அம்மாநான் சின்னச்சிறியேன் இந்த
பொம்மையான பெண்களுடன்என்றுமறியேன்
செம்மையா யெங்குந்திரியேன் வீணுகச்
சும்மாநானொருகா ரியம்புரியே(பொ)

பாலனென்ன ஏசுராம்மா வாதனே
பாலதாசனென்றுனை வீசுராம்மா
மேலுமின்னும் கூசுராம்மா இந்த
வீணுவார்த்தைகளைப் பேசுராம்மா (பொ)

இவ்விதமாகச்சொல்லிய ஸ்ரீபாலகிருஷ்ணமூர்த்தியை நோக்கி தீர்க்க தெண்டனிட்டுப்பெண்கள் சொல்லும்.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி துதி.

கடிகமழுந்துளபமணி மார்பனேயெங்
கண்மணியேசெங்கமல கணவாமூன்று
படியுமோரடியாக வளர்ந்தபாதா
பக்தவச்சலமுகுந்தா பட்சிராஜா

கொடையுடையகாரம்புயனே யாயர்பாடிக்
கோபிகளுக்கின்பருளுங் குருந்தேமுன்னு
மிடியவரேம்புத்ரமித்ர களத்திராதி
யருஞ்செல்வம்பெற்றுளநீ வருள்செல்வாயே

நாமாவளி.

அம்பலத்தரசேயருமருந்தே ஆனந்தத்தேனேயருள்விருந்தே, பொதுநடத்தரசே புண்ணியனே புலவரெலாம்புகழ் கண்ணியனே, மலைதருமகளே மடமயிலே மதிமுகவமுதே யிளங்குயிலே, ஆனந்தக்கொடியே யிளம்பிடியே யற்புதத்தேனே மலைமானே சிவசிவ சின்மயதேஜா சிவசுந்தரகுஞ்சித நடராஜா, படனவிவேகபரம்பரவேதா நடனசபேச சிதம்பரநாதா அரிபிரமாதியர் தேடியநாதா அரகரசிவசிவவாடியபாதா, அந்தவலங்கண வம்பரபோகா இம்மலவம்பிரவம்பிகைபாதா, அம்பரவிம்பசிதம்பரநாதா அஞ்சிதாஞ்சித குஞ்சிதபாதா, தந்திரமந்திர யந்திரபாதா சங்கரசங்கர சங்கரநாதா, கனகசிதம்பர சங்கரபுரஹர அனகபரம்பர சங்கரஹரஹர, சகலகலாண்ட சராசரக்காரண சகுணசிவாண்ட பராபரிபூரண, இக்கரைகடந்திடி லக்கரையே இருப்பது சிதம்பரஞ் சர்க்கரையே என்னுயிருடம்பொடு சித்தமதே இனிப்பது நடராஜ புத்தமுதே, ஐயர்திருச்சபைநாடகமே ஆடுதலானந்தநாடகமே, உத்தரஞான சிதம்பரமே சித்திபெலாந்தருமம்பரமே, அம்பலவாசிவமாதேவாவம்பவா விங்குவாவாவா, நடமிடுமம்பல நன்மணியே புடமிடுசெம்பலப் பொன்மணியே, உவட்டாதுசித்திக்கு முள்ளமுதே தெவிட்டாதுதிக்குந் தெள்ளமுதே, நடராஜவள்ளலே நாடுதலே நந்தொ

ழிலாம்விளையாடுதலே, அருட்பொதுநடமிடுதாண்டவனே யருட்பெருஞ் சோதியென்றுண்டவனே நடராஜமாணிக்கமென்றதுவே நன்னுதலாணிப்பொன் மன்றதுவே, நடராஜபலமதுநம்பலமே நடமாவெது திருவம்பலமே.

அருள்விளக்கமாலை.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே, காணார்க்குங்கண்டவர்க்குங் கண்ணளிக்குங்கண்ணே, வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்குமவரமே, மதியார்க்கும் மதிப்பவர்க்கு மதிகொடுக்குமதியே, நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்றநடுவே, நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்குநலமே, எல்லார்க்கும்பொதுவில்நடமிடுகின்றசிவமே, என்னரசேயான்புகலு மிசையுமணிந்தருளே. (1)

தனிச்சிறியேன் சிறிதங்கேவருந்தியபோதனைத், தன்வருத்தமெனக்கொண்டு தரியாதக்கணத்தே, பனிப்புறுமவ் வருத்தமெல்லாம் தவிர்த்தருளுமகனே, பயமுனக்கென்றென்னைப் பரிந்தணைத்தகுருவே, இனிப்புறுநன்மொழிபுகன்றென் முடிமிசைமலர்க்கால் இணையமர்த்திக்களையாண்ட வென்னுயிர்நற்றுணையே, கனித்தநறுங்கனியேயென்கண்மணியே சிற்சபையிற் கலந்தநடத்தரசே கருத்துமணிந்தருளே. (2)

இருளிரவிலொருமூலைத் திண்ணையில்நான்பசித்தே, இளைப்புடனேபடுத்திருக்கவெனைத்தேடிவந்தே, பொருளுணவுகொடுத்துண்ணச் செய்வித்தேபசிப்பை, போக்கியருள் புரிந்தவென்றன் புண்ணியநற்றுணையே, மருளிரவு நீக்கவாழ்வுமெனக்கருளி மணிமேடைநடுவிருக்கவைத்த வொருமணியே, யருளுணவு மளித்

தென்னையாட்கொண்டசிவமேயம்பலத்தென்னரசே யென்னலங்க மணிந்தருளே. (3)

நான்பசித்தபோதெல்லாந் தான்பசித்ததாகில்லுணவுகொடுத்தென்னைச் செல்வமுறவளர்த்தே யூன்பசித்த வினைப்பொன்றுந் தோற்றுக வகையே யொளிதென்னமுதெனக் கிங்குவந்தளித்த ஒளியே,வான்பதிக்குநெடுமாற்கு நான்குமுகற்கு மரிதாம்வாழ்வெனக்கேயாகியுற வாமளித்தபதியே, தேன்பருந்தகூர்மணமே திருப்பொதுவில் ஞானத்திருநடஞ்செய்யரசே என்சிறுமொழியேற்றருளே. (4)

விநோதவிடுகதைகள்.

முன்னொருஊரின்பேராம் முதலெழுத்தில்லாவிட்டால், நன்னகர்மன்னர்பேராம் நடுவெழுத்தில்லாவிட்டால், கன்னமாம்விலக்கின்பேராம் கடையெழுத்தில்லாவிட்டால், உன்னியதேனின்பேராம் உரைப்பீரிவ்வூரின்பேரை   மதுரை

கிண்ணியைப்போல்பூப்பூக்கும்   பூசினிப்பூ
பெரியகடார்த்தங்காய்போல்காய்காய்க்கும் பூசினிக்
[காய்
கருப்புச்சட்டைக்காரன் காவலுக்குகெட்டிகாரன்
[பூட்டு
ஜாடிமேலே குரங்கு   முந்திரிக்கொட்டை
நோய்நொடியில்லாமல் முக்கித்திரிகிறானொருவன்
[பன்றி
கோயில்குளமில்லாமல் கொட்டித்திரிகிறானொருவன்
[குயவன்
ஏறாதமரத்திலே எண்ணாயிரங்காய்   கேழ்வரகு
தச்சனிழைக்காதமரமென்னமரம்   துடப்பம்
கிணற்றைச்சுற்றிப்புல்   கண்ரெப்பை
சின்னவீட்டுநிறையச்சிறு   வாய்நிறையப்பல்
ஊருக்கெல்லாம் ஒரேதுப்பட்டி   ஆகாயம்
ஊருக்கெல்லாம் ஒரேகல்   உப்பு
சின்னவெங்காரம் வீடெல்லாஞ்சிங்காரம்   விளக்கு

ஒருபொறிபறக்க வூரெல்லாம்பொறி   விளக்கு
சொக்குநிற்கநிற்க குளம்வற்றவற்ற   விளக்கு
சொம்புநிறையச்செம்பு   மாதுளம்பழம்
அள்ளுவான்கிள்ளமாட்டான்   தண்ணீர்
எங்கள்மாட்டுக்குமூன்றுகொம்பு   குத்தால்பாயும்
[ஊவாமுள்ளு
ஒருநெல்குத்திவீடெல்லாம்உமியாச்சுது   விளக்கு
இரண்டுவீட்டுக்கு ஒருதூலம்   மூக்கு
ஒருபுட்டியில் இரண்டுதைலம்   கோழிமுட்டை
முள்ளில்லாதமீன்என்னமீன்   முட்டை
சுட்டுவிட்டகுருவிசப்பலேறுது   வடை
குத்துக்குருவிக்கு முழம்வால்   அகப்பை
உரித்துவிட்டகுருவி வூருக்குப்போகிறது   புளி
காட்டிலேதுளிரத்தம்   குண்டுமணி

காலேயிரண்டுண்டு நடக்கறியாளிரு கண்ணுமுண்டு மேலேவிழிகள் நோக்கறியாளந்த மெல்லிநல்லாள் பாலேகுடிக்கவகையறியாள் கொஞ்சம் பாக்குந்தின்பாள், ஆலோசனைசெய்து சொன்னவர்க்கு செம்பொன் ஆயிரமே.   பாக்குவெட்டி

மண்பிசைந்து வேலைசெய்வான் குயவனல்ல, வங்காளம் போய்வருவான் செட்டியல்ல கண்ணுண்டு மூக்கில்லை தேங்காயல்ல, காலுண்டு தலையில்லைகபந்தமல்ல, இன்னுஞ்சிலபேர்க்கு இச்சையாவான் ஈசனுக்கும் மாயனுக்கும் பெரியோன்தானே   நண்டு

கூட்டிலே யிருக்குமது கிளியுமல்ல கொழுந்தோடியிருக்குமது இரைதின்னாது, காட்டிலேவிட்டுவிட்டால் பறந்தேபோகும் கனத்தமன்னர் வாசலிலே காவலாகும் சட்டிகத்திபிடித்தவர்க்கு எதிரேநிற்கும் இக்கதையைச்சொல்லுகிறேன் பூவையற்கு நாட்டினிலிக்கதையை யுரைத்தாரானால் நாமவரைக்குரு வென்று வணங்கலாமே.   அம்பு

ஈரேழுபதினலு லோகங்களிலே இருபுறமுந்தச் சமைத்திட்டது மதிலே, மாயேபுஷ்பமா விதைமதிலே வந்தாடும்பெண்களுக்கு மாண்டமதிலே,
[பள்ளாங்குழி

பொன்னுவெள்ளியும் பூண்டுமினுக்கிவள்போகவே எண்ணெய்வார்த்துமுழுகுவள், வர்ணமாயிரம்பூவை முடிப்பவள் வழிநடைக்கு அலங்காரிகாண், சொன்னதாசைப் பணத்தைப்பறிப்பவள் சொல்லென்றனும் தாசியல்லகாண், மன்னவாயிந்தற்கதை தன்னையே மனமகிழ்ந்து வுரைத்துநீபோவையே
[செருப்பு

ஐவருடனேபிறந்தான் தருமனல்ல அதிலொருவன்சாட்சிசொல்வான் மனிதனல்லதன்சுவையைந்தான்சுவைப்பான் ஞானியல்ல தாணியெங்கும் புல்சுமப்பான் பண்டாரனல்ல, கன்னியமாமணம்புரிவான் கடைசிதம்பிகண்டுசெல்வானவனே தங்கச்சியாமே
]ஐந்துவிரல்கள்

அந்தரத்தில் பறந்திடும்பறந்தேயல்ல அழகானவாலுமுண்டு அனுமாரல்ல விந்தையுடன் கட்டுண்ணுங் கட்டுமல்ல வேந்தராதுதிருநாமம் அவர்க்கேயுண்டு
[காற்றாடி

பேச்சில்லை பெருமூச்சுவிடுவான் உணவில்லைவரை சமைப்பான உயிரில்லை ஓடித்திரிவான் பாதமில்லைதண்ணீர்குடிப்பான், கண்டதுண்டமாய் கரியைத்தின்பான் கண்களில்லை காதம்நடப்பான், குரலில்லை கூச்சலிடுவான் மழையில்நனைவான், வெயிலிற்காய்வான்நோயுமடையான் மருந்தும்புசியான் எப்படிசொன்னுலும் அப்படியேகேட்பான். புகைவண்டி.

பிடிபிடி சப்பல்பொருக்கி அரண்மனை வாசல்கட்டி பார்க்கவந்த ராசாக்களெல்லாம் பல்லையிளித்தார்கள். மீன்

கனதனத்தாளைக் கடையிலேகண்டேன் கண்டவுடனே கொண்டேன் கொண்டவுடனே அடித்தேன் அடித்தவுடனேசிரித்தாள் சிரித்தவுடனேகடித்தேன்
[தேங்காய்

மதுரமான் ஏரியில் மான்வந்து நிற்கின்றது கட்டடாபிடிடா கள்ளகயிறுபோட்டா இந்தவிடியைவிடுத்தவர்க்கு நூறுவெற்றிலை நூறுபாக்குசுண்டுவிரல்களால்குற்றுசுண்ணாம்பு ஸ்டமர்

மூன்று முள்ளுக்குள்ளே முந்திரித்தோப்புக்குள்ளே வைக்கப்போருக்குள்ளே கண்டெடுத்தேன்னை ரமணி பலாப்பழம்

பச்சைப்பச்சென்றிருக்கும் பாவக்காயுமல்லபக்கத்தில் முள்ளிருக்கும்பாவக்காயுமல்ல உள்ளேவெளுத்திருக்கும் தேங்காயுமல்ல, உருக்கினல்நெய்யொழுகும் வெண்ணையுமல்ல முத்துக்கொட்டை

சந்தனம் புனுகுபோல் விதித்தகதைசொல்லவா தகப்பனுரோடிவந்து அடித்தகதைசொல்லவா செங்கரடுதிப்பட்டு வெந்தகதைசொல்லவா தேசமெங்கும் இருபுறமாய் மாண்டகதைசொல்லவா. சட்டிப்பானை

இவ்வளவுண்டு சிற்றுண்டி வயிற்றைப் பிதுக்கினு செத்தாண்டி நெல்லு

சின்னசிறுக்கியும் சின்னபையனும் சிறுத்துக்கட்டினதாலி சிக்கில்லாமல் அவிழ்ப்பவர்களுக்கு சென்னப்பட்டணம்இனும் தூக்கணங்குருவிகூடு

ஜன்னல் பின்னல்கயிறு ஜாதிலிங்ககயிறு என்னைபடாதகயிறு என்னகயிறு பாம்பு

அருணகிரி தருணகிரிமேடை அந்நூற்றைங்காத வழி கற்பூரவாடை இதை விடுத்தவர்களுக்குப் பூவினல்மாலை தவணமரி

வட்டவட்டசிங்கன்னு வாலில்லாதசிங்கன்னு என்னைவந்து எழுப்பன்னு மூட்டுப்பூச்சி

இராஜாத்தி ராஜவடிபிள்ளை அவள்பூசுகிறசெந்த பொடிபிள்ளை அவள்வயிற்றிலே ஆறுமாதம்பிள்ளை
[தாழம்பூ

அஞ்சிலபிஞ்சில ஹாஹா அறியாதசன்னலுவானை சிறியவர்களே இப்படியிருக்கிறீர்களே உங்கள்பெரியவர்கள் எப்படியிருப்பார்கள் நெற்றிலிக்கண்டை

பத்துவிரல்பந்தாட ஐந்துவிரல் அமர்ந்திருக்கஞரியனுடன்சூதாட எமனுடன்வாதாட
வரட்டி

காயுங்கோணற்காய் கொள்ளடாமைத்துனகதையும் விடுவித்தேன் சொல்லடா மைத்துன
கொள்ளுக்காய்

பந்துபந்தடா புளிசம்பந்தடா நின்றதாக்கடா உயிரைப்போக்கடா
துப்பாக்கி

போவான்வருவான் திம்மப்பன் ஒருகாலில்நிற்பான் திம்மப்பன்
கதவு

ஆயாள்வீட்டுத்தோட்டத்திலே மஞ்சள்குருவி ஊஞ்சலாடுது
எலுமிச்சம்பழம்

மொட்டைமாடு உட்கார்ந்திருக்கிறது மூக்காங்கயிறு மேய்ந்துவருகிறது
பூசினிக்காய்

ஆயாள்வீட்டுத் தோட்டத்திலே பச்சைப்பாம்பு தொங்குது
புடலங்காய்

வட்டமதிபோலிருக்கும் வன்னிகொடிதாவும்கொட்டுவார் கையினின்று கூத்தாடும் சுட்டால் அரகராவென்று என்றுமே அம்பலசோமாசிஒருநாள்விட்டநீதுரை
வரட்டி

கொங்கையென்னும் பால்வடிய பூமுடிப்பாள்கூறிவருமாதக் காவலிருப்பாள் அங்கமெல்லாம்மினுமினுக்க வெட்டிபார்ப்பாள் அவள்பேரிலெல்லாருமாசைகொள்வார் கொங்கையினை கொங்கைதனை பிசையச்சொல்வாள் தெரிவிலே நின்றுவிலை கூறுவாளே.
கம்பங்கதிர்

பட்டைபட்டைநீக்கி பதினறுபட்டைநீக்கிமுத்துப்பட்டைநீக்கி ஸான்னேவாள் சிமாட்டி
வாழைப்பூ

ஆனாலுபவழப்பல்லுபத்துவெள்ளித்தடியூர்ஸ்டு வெண்சாரம் ஒன்று
பசு

மந்திரமெல்லாம் ஒரு முட்டைக்குள்ளே மானமெல்லாம்ஒரு கொட்டைக்குள்ளே
பரித்திக்கொட்டை

எங்கள்தம்பி பந்தடிப்பான் பயாடிப்பான் நூறுபேரை நறுங்கடிப்பான்
சர்குளி

அடிமத்தளம் இலைபர்வதம் கொலைசிறுசுகாய்த்துவரு பழம் தித்திப்பு
வாழைமரம்

மூக்குத்திப்போல பூபூர்க்கும் அப்பாடா என்று காய்காய்க்கும்
நெரிஞ்சிப்பூ, நெரிஞ்சிமுள்

ஆயிரம்பேர்தச்சர்கூடி அழகான மண்டபங்கட்டி ஒருவன்கண்பட்டு உடைந்ததாம்மண்டபம்
[தேன்கூண்டு

பச்சைப்பச்சப்பல்லக்கு பார்ப்பாரபல்லக்குஇரும்பாலடித்தாலும் திரும்பாதபல்லக்கு
பிணம்

ஒருமரம் மரத்துக்கு பன்னிரண்டுகிளை கிளைக்கு முப்பது இலை
வருஷம் மாசம் நாள்கள்

ஆழக்குழிவெட்டிஅதிலேஒருமுட்டையிட்டுஅன்றுபார்த்தால் தொண்ணூறுமுட்டை
பனைமரம்

வண்ணான் வெளுக்காதவெள்ளை மழைபெய்யாத தண்ணீர் குயவனபண்ணாதபாண்டம்
தேங்காய்

சிறுகடலும் பெருகடலும் பொங்கிவர சிறுமுத்துகளெல்லாம் குதித்துவிழ மட்டந்தேங்காய்மலர்ந்துவர சங்கிலிபோட்டு விழுத்துவர
சோறுவடிதல்

வருகிறதும்போகிறதுஎன்றாலே வந்துகிடைக்கிறதுமேதாலே சாவப்போகிறது உன்றாலே செத்துக்கிடக்கிறதும் என்றாலே
மீன்

விநோதவிடுகதை-முற்றிற்று.

மங்களம்.

சுருட்டி-அடதாளம்.

பல்லவி.

மங்களம் ஜயமங்களம் ஈசுவரனுக்கு
மங்களம் ஜயமங்களம்.

அநுபல்லவி.

அங்கனல்செங்குபிறை துங்கமாதேவனுக்கு
மங்களமார்திருவருள் வழங்குமகாநுபாவனுக்கு ம

சரணங்கள்.

எல்லாச்சகங்களையு மியற்றவல்லானுக்கு
எவர்களுமேத்துரை மியம்புசொல்லானுக்கு
கல்லார்பிழைபொறுக்குங் கருணைநல்லானுக்கு
காசிக்கினியவருக் கவினுர்தொல்லானுக்கு மங

மாதவமார்தொழும் வாரிசப்பொருளனுக்கு
வளருங்கேயூரங்கள் வனைத்திண்டோளனுக்கு
சீதளமதிமுகத்துச் சிவமணவாளனுக்கு
தேவாதிதேவனுக்கு திவ்யகுணாளனுக்கு மங

சொல்லும்பஞ்சகீர்த்தியும் செய்யும்வினோதனுக்கு
திகழுமடியோர்கட்குத் தெளிவித்தபோதனுக்கு
வல்லையனுக்கிரங்கும வலமிருநாதனுக்கு
மாணிக்கர்தனக்கருள் மனவாக்கதீதனுக்கு மங

வாழ்த்து.

வேதம்வாழி விமலனும்வாழியிவ்
கோதமான்மாக்கள வழியுவந்தமெய்க்
காதலன்பர்கள் வாழிகவுணிநூல்
ஓதுபெண்களும் வாழியுலகின்.

பாலிகாபூஷணம் - முற்றிற்று.

148443